விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

வலம்புரி

Valampurii

பக்கங்கள்: நான்கு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 மாசி 24 வியாழக்கிழமை (08.03.2007) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 79

ராம் கோ

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

RAMCO

ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.

ராம்கோ சிமெந்து

புலிகள் வசமுள்ள இராணுவத்தினரை உறவினர்கள் நேற்று சந்தித்தனர்!

(கிளிநொச்சி)

விடுதலைப்புலிகளால் கைது செய்யப் பட்டு சிறைப்பிடிக்கப்பட்ட ஐந்து தரைப்படை மற்றும் கடற்படையைச் சேர்ந்தவர்களை அவர்களது பெற்றோர்கள் மற்றும் உறவினர் கள் சந்தித்துள்ளனர்.

இச் சந்திப்பு நேற்று முற்பகல் 11 மணி முதல் பிற்பகல் 2.30 மணிவரை நடைபெற் றது. சர்வதேச (04 ஆம் பக்கம் பார்க்க)

இலங்கைக்கு அமைதிப்படையை அமெரிக்க அரசாங்கம் அனுப்பாது!

அதன் தூதுவர் தெரிவிப்பு

(கொழும்பு)

பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷவிற்கும் அமெரிக்காவின் இலங்கை தூதுவர் றொபேட் ஓ பிளக்கிற்கும் இடையில் கடந்த திங்கட்கிழமை செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தமானது சாதாரண பொருட்கள் மற்றும் சேவைகளின் வழங்கல்களுக்கான ஒரு உடன்பாடு என அமெரிக்க தூதரக வட்டாரங் கள் தெரிவித்திருந்தன.

இது தொடர்பில் அமெரிக்க தூதரக ஊட கத்துறை அதிகாரி ஈவான்ஸ் ஓவன் தெரிவித் ததாவது, அமெரிக்காவின் அமைதிகாக்கும் படையினர் இலங்கையில் பணியாற்றுவதோ அல்லது இலங்கை (04 ஆம் பக்கம் பார்க்க)

மனித உரிமை கண்காணிப்புக்குழுவை இலங்கையில் அமைக்க தீவிரமுயற்சி

கொலைகள், கைதுகளை தடுக்க நடவடிக்கை

(கொழும்பு)

சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்புப் பிரிவை ஐக்கிய நாடுகள் சபையின் ஆதரவுடன் இலங்கையில் அமைப்பது தொடர்பாக அமெரிக்காவின் நியூயோர்க்கை தளமாகக் கொண்டு இயங்கும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் எனப்படும் ஹியுமன் றைட்ஸ் வோர்ட்ச் அமைப்பு உட்பட பல முன்னணி மனித உரிமை அமைப்புக்கள் ஆராய்ந்து வருவதாக தெரிவிக் கப்படுகின்றது.

(04 ஆம் பக்கம் பார்க்க)

வவுனியாவில் நேற்று கிளைமோர்த் தாக்குதல்

வவுனியா மாமடுவச் சந்தியில் நடத்தப் பட்ட கிளைமோர்தாக்குதலில் பொலிஸ் கான்ஸ் டபில் ஒருவர் கொல்லப்பட்டதோடு மேலும் இரு பொலிஸாரும் பொதுமகன் ஒருவரும் சிறு காயங்களுக்கு உள்ளாகியதாக வவுனி யா பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வாகனத்தில் சென்றுகொண்டிருந்த பொலிஸாரை இலக்கு வைத்து நேற்றுக் காலை 10.50 மணியளவில் ஹொரவப்பொத் தானை வீதி மாமடுவச் சந்தியில் இக் கிளை மோர் வெடித்துள்ளது. காயமடைந்தவர்கள் வவுனியா மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். (ச-5)

வவுனியாவில் நேற்று இளைஞன் சுட்டுக்கொலை

வவுனியா பண்டாரிக்குளம் பிரதேசத்தி லுள்ள குளக்கட்டுப் பகுதியில் நேற்று இளை ஞர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். இவ் வாறு சுட்டுக்கொல்லப்பட்டவர் சிவபாலன் சசிதரன் (வயது 27) என அடையாளம் காணப்பட்டுள்ளார். சடலம் பொலிஸாரால் மீட்கப்பட்டு வவுனியா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (ச-3)

84 ஈழத் தமிழர்களையும் திருப்பி அனுப்ப வேண்டாமென கூட்டமைப்பு கோரிக்கை

(கொழும்பு)

அவுஸ்திரேலிய கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 84 இலங்கைத் தமிழர்களை திருப்பி அனுப்பவேண்டாமென தமிழ்த்தேசி யக் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக கூட்டமைப்பு பாராளுமன் றக் குழுவினர் வெளியிட்ட செய்திக்குறிப்பு வருமாறு, இலங்கையில் தமிழ் மக்களுக்கு எதிரான பாரிய மனிதவுரிமை மீறல்கள் இடம்பெறுகின்றன. இலங்கை அரசினால் மீண்டும் அமுல்படுத்தப்பட்டுள்ள அவசரகா லச் சட்டம், பயங்கரவாதத் தடைச்சட்டம் என்ப வற்றினைப் பயன்படுத்தி அப்பாவித்தமிழ் மக் களை நீதிக்குப் புறம்பாக கைது செய்தல், சித்திரவதை செய்தல், கடத்தல், கொலை செய் தல், பாலியல் துன்புறுத்தல்கள் போன்ற நட வடிக்கைகளில் ஆயுதக்குழுவினர் ஈடுபட்டு வருகின்றனர். (04 ஆம் பக்கம் பார்க்க)

அக்ஸன் பாம் ஊழியர்களின் மரணம் கொலை எனத் தீர்ப்பு

(திருகோணமலை)

மூதூர் பகுதியில் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த சர்வதேச தொண்டர் நிறுவனமான அக்ஸன் பாம் அமைப்பின் ஊழியர்கள் 17 பேர் மரணமான சம்பவம் ஒரு கொலைச் செயல் என அது குறித்து மரண விசாரணையில் தீர்ப்பு வழங் கப்பட்டுள்ளது. திருகோணமலை கந்தளாய் நீதிமன்றத்தில் நடந்த இது தொடர்பான மரண விசாரணையின்போது அநுராதபுரம் நீதிபதி வசந்த ஜினதாச இந்தத் தீர்ப்பை அறி வித்தார்.

அத்துடன் இந்த மரணங்கள் குறித்து புலன் விசாரணை (04 ஆம் பக்கம் பார்க்க)

தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்கள் யப்பானிய தூதுவருடன் சந்திப்பு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த 12 நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று இலங்கைக்கான யப்பானியதூதுவரை சந்தித்து கலந்துரையாடினர். இரா.சம்பந்தன் தலை மையிலான குழுவினர் நடத்திய இச் சந்திப் பில் தமிழ் மக்கள் மீது அரசாங்கம் புரிந்து வரும் சம்பவங்கள் பற்றி விரிவாக எடுத்துக் கூறப்பட்டது.

மேலும் மட்டக்களப்பில் தமிழ் மக்களை தொடர்ந்தும் இடம்பெயரச் செய்யும் வகை யில் படையினர் நடத்தி வரும் தாக்குதல்கள் பற்றியும் யப்பானியத் தூதுவரிடம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எடுத்துரைந்தனர்.

படுகொலைகள், கடத்தல்கள் என்பவற் றை தடுக்க அரசு எவ்வித நடவடிக்கைகளை யும் எடுக்கவில்லை என அவர்கள் சுட்டிக்காட் டியுள்ளனர். (ச-3,5)

மூன்று சந்தேக நபர்கள் நேற்று நீதிமன்றில் ஆஜர்

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர் புகளை வைத்திருந்ததாக சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட மூன்று சிங்களவர் கள் கடுமையான பாதுகாப்புக்கு மத்தியில் நேற்று கொழும்பு நீதிமன்றத்தில் ஆஜர்படுத் தப்பட்டனர்.

விடுதலைப்புலிகளின் ஆதரவுடன் அமைக்கப்பட்டதாகக் கூறப்படும் புரட்சிகர விடுதலை அமைப்பின் தலைவர் லலித் சேனாரட்ண, அதன் உப தலைவர் சிசர பிரி யங்க மற்றும் நிகால் செனிவிரட்ண ஆகிய சந்தேக நபர்களே நேற்று நீதிமற்றில் ஆஜர் படுத்தப்பட்டனர்.

கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட் டுள்ள மற்றுமொரு சந்தேக நபரை நீதிமன் றத்தில் ஆஜர் படுத்துவதற்கான திகதி இது வரை வழங்கப் (04 ஆம் பக்கம் பார்க்க)

அவசரகாலச் சட்டம் மேலும் ஒரு மாதம் நீடிப்பு

அவசரகாலச் சட்டம் மேலும் ஒருமாத காலத் திற்கு, 105 மேலதிக வாக்குகளால் நாடாளுமன் றத்தில் நேற்று நிறைவேற்றப்பட்டது. ஆதர வாக 123 வாக்குகளும் எதிராக 18 வாக்குக ளும் அளிக்கப்பட்டுள்ளன. அரசாங்கத்து டன் இணைந்து ஐக்கிய தேசியக்கட்சி, ஜே.வி.பி. இலங்கை தொழிலாளர் காங்கிரஸ், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் என்பன ஆத ரவாக வாக்களித்தன.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மற்றும் மேலக மக்கள் முன்னணி என்பன பிரேர ணைக்கு எதிராக வாக்களித்துள்ளன. (ச-3)

தீர்ப்புக்குறித்து திருப்தியடையவில்லை உயர் நீதிமன்றம் செல்வதே அடுத்த வழி

ஜே.வி.பி.அறிவிப்பு

(கொழும்பு)

போர் நிறுத்த உடன்படிக்கையை ரத்துச் செய்யவேண்டும் என்று நாங்கள் செய்த மனு வுக்கு கிடைத்துள்ள தீர்ப்புக்குறித்து ஜே.வி.பி. திருப்தியடையவில்லை. எனவே அரசியல மைப்பின் பிரகாரம் இந்த வழக்கை உயர் நீதிமன்றத்துக்கு கொண்டு செல்ல நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

புலிகளுக்கு ராஜதந்திர அந்தஸ்தை பெற்றுக்கொடுத்த போர் நிறுத்த உடன்படிக்கை யினை அனைத்து சட்ட நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு ஜே.வி.பி.அர்ப்பணிப்புடன் இருக் கின்றது என்று நாட்டின் அனைத்து இன மக் களுக்கும் அறிவிக்கின்றோம் என ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

போர் நிறுத்த உடன்படிக்கையை ரத்துச் செய்ய வேண்டும் என்ற கோரிக்கை அடங் கிய மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நிராகரித்த (04 ஆம் பக்கம் பார்க்க)

மந்துவிலில் தாக்குதல்

(கொழும்பு)

தென்மராட்சி மந்துவிலிலுள்ள இராணு வத்தின் 52 ஆவது படைப்பிரிவின் தலைமை அலுவலகம் நேற்று முன்தினம் விடுதலைப் புலிகளின் ஆட்லறித்தாக்குதலுக்கு இலக்கா கியுள்ளது. இரு ஆட்லறி ஷெல்கள் இராணுவ முகாமிற்கு உள்ளேயும் வெளியேயும் விழுந் துள்ளன.

இதனையடுத்து குறித்த பகுதியில் அம் புலன்ஸ் ஒன்று பலாலி இராணுவ வைத்திய சாலையை நோக்கிச் சென்றுள்ளதாக தமிழ் நெற் தெரிவித்துள்ளது. (04 ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

நூல் வெளியீட்டு விழா

யாழ்.மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியமும் இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ்.கிளையும் இணைந்து நடாத்தும் 'Welfare Camps in Emergency' நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் பத்தாம் திகதி காலை 9 மணிக்கு யாழ்.அரச சார்பற்ற நிறுவனங்களின் ஒன்றியத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைவர் ஏ.கே.சிவசுப்பிரமணியம் தலைமையில் இந் நிகழ்வு நடைபெறவுள்ளது.

நூலினை இலங்கைச் செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளைத் தலைவர் பேராசிரியர் வி.கே.கணேசலிங்கம் எழுதியுள்ளார். (ச)

மகளிர் தின நிகழ்வு

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு பால்நிலை அடிப்படையிலான வன்முறைக்கு எதிரான செயற்குழுவும் செயற்றிறன் அரங்க இயக்கமும் இணைந்து நடாத்தும் மகளிர் தின ஒன்றுகூடல் இன்று காலை 9 மணிக்கு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ச)

கிளாலிப் பகுதியில் விமானத் தாக்குதல்

முகமாலை, கிளாலி மற்றும் அலம்பல் பகுதிகளில் கிபீர் விமானங்கள் தாக்குதல்களை நடத்தியுள்ளன.

நேற்றுப் பிற்பகல் 2 மணியளவில் யாழ். முன்னரங்கப் பகுதிகளை வட்டமிட்ட 4 கிபீர் விமானங்கள் இக் குண்டுவீச்சுத் தாக்குதலை நடத்தியதாகக் கிளிநொச்சிச் செய்திகள் தெரிவித்தன. (ச)

சேதனக் கூட்டுப் பசளைத் தயாரிப்புக்கு பயன்படும் கழிவுப் பொருள்கள் விஷமிகளால் எரிப்பு

யாழ்.மாநகர சபை ஆணையாளர் எச்சரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாநகர சபையினால் சிப்பித்தறைப் பகுதியில் போடப்படும் கழிவுப் பொருள்களை எரிக்கும் விஷமிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ்.மாநகர சபை ஆணையாளர் மு.செ.சரவணபவ எச்சரித்துள்ளார்.

கடந்த காலங்களில் நகரப் பகுதியிலிருந்து சேகரிக்கப்படும் குப்பைகள் சேதனக் கூட்டுப் பசளை தயாரிப்புக்குப் பயன்படுத்தப்பட்டு வந்தன.

இந்தச் சேதனக்கூட்டுப் பசளைத் தயாரிப்பு நிலையம் பொம்மைவெளிப் பகுதியில் அமைந்துள்ளது. தற்போது ஏற்பட்ட சூழ்நிலையைத் தொடர்ந்து பாதுகாப்புக் காரணங்களால் அப்பகுதிக்கு செல்வதற்கான அனுமதி தடைசெய்யப்பட்டுள்ளது.

இதனையடுத்து சேகரிக்கப்படும் கழிவுப் பொருள்கள் போடுவதற்கு நகரில் இடமின்மையால் தனியார் ஒருவரின் காணியில் போடப்படுகின்றது. அப் பகுதியினைச் சூழ குடியிருப்புக்கள் உள்ளன.

இந்நிலையில் கழிவுப் பொருள்கள் விஷமிகள் சிலரால் எரிக்கப்பட்டு வருகின்றது. இவ்வாறான நடவடிக்கையினால் அப் பகுதியிலுள்ள குடியிருப்புக்களுக்குச் சேதம் ஏற்பட்டு விடுமா? என்ற அச்சம் நிலவுகின்றது என அவர் மேலும் கூறினார். (ச-3)

இந்து ஆலயங்களை பதிவு செய்யுமாறு இந்து சமயப் பேரவை வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலுள்ள இந்து ஆலயங்களை பதிவு செய்யுமாறு இந்து சமய பேரவை கேட்டுள்ளது. இந்து ஆலயங்களுக்கான பூஜைப் பொருள்களை ஒழுங்கு முறையில் விநியோகிப்பதற்கு ஏதுவாக ஆலயங்களைப் பதிவு செய்யுமாறு கேட்கப்பட்டுள்ளது.

இதற்கான விண்ணப்பப் படிவங்களை ஆலய உரிமையாளர்கள் அல்லது தர்மகர்த்தா சபையினர் 141 பலாலி வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலுள்ள இந்து சமய பேரவை அலுவலகத்தில் பெற்று பூர்த்தி செய்து எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

பதிவு செய்த ஆலயங்களுக்கு மட்டுமே இனிவரும் காலங்களில் பூஜைப் பொருள்கள் வழங்கப்படும் எனவும் இந்து சமயப் பேரவையினர் அறிவித்துள்ளனர். (ச)

கல்வியலாளர் சேவை III ற்கு மேலும் 9 பேருக்கு அழைப்பு

(யாழ்ப்பாணம்)

இலங்கை கல்வியலாளர் சேவையில் III ஆம் வகுப்பிற்கான நேர்முகப் பரீட்சைக்கு மேலும் 9 பேர் அழைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நேர்முகப்பரீட்சை இசுறுபாய கல்வியமைச்சில் எதிர்வரும் 23 ஆம் திகதி நடைபெறவுள்ளதாக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்பட்டவர்களின் விபரம் வருமாறு,

அ.அகிலதாஸ் (யாழ்ப்பாணம்), கே.தர்மசேகரம்(யாழ்ப்பாணம்), ஏ.சபேசன்(வட்டுக்கோட்டை), எஸ்.நாதசீலன் (சுண்டுக்குளி), எஸ்.சிவகௌரி (யாழ்.பல்கலைக்கழகம்), ரி.ராகுலேசன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), ஜே.சந்திரப்பிரகாசம் (பருத்தித்துறை), ஞா.இரத்தினசிங்கம் (கல்வியங்காடு), அ.தயாபரன்(பருத்தித்துறை) (ச)

துப்பாக்கிச் சூட்டில் பொலிஸார் பலி

(மன்னார்)

மன்னார் பரப்புக்கடந்தான் நிலசேரிப் பகுதியில் நேற்றுக் காலை 7.30 மணியளவில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் பொலிஸ் உத்தியோகஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவத்தைத் தொடர்ந்து மன்னார் தள்ளாடி முகாமிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் மீது எறிகணைத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தேசிய பாதுகாப்பு ஊடக மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.(ச-3)

நாட்டில் அபிவிருத்தியை அதிகரிக்க பயங்கரவாதம் முறியடிக்கப்படும்

பிரதமர் ரட்ணசிறி உரை

(கொழும்பு)

நாட்டின் அபிவிருத்தியை வேகப்படுத்துவதன் மூலம் பயங்கரவாதத்தை முறியடிக்க அரசாங்கம் முயற்சிகளை மேற்கொண்டு வருவதாக பிரதம மந்திரி ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்துள்ளார்.நாடாளுமன்றத்தில் நேற்று அவசர காலச் சட்டத்தை ஒரு மாத காலத்திற்கு நீடிக்கும் பிரேரணை விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றும் போது இதனைத் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர்புடைய சிங்களவர்களைக் கைது செய்ய பாதுகாப்புப் படையினர் சிறப்பாகச் செயற்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இவர்கள் கொழும்பில் பல முக்கிய இலக்குகளைத் தாக்குவதற்கு திட்டமிட்டிருந்ததாக அவர் குறிப்பிட்டிருந்தார்.

இராஜதந்திரிகள் மீது விடுதலைப்புலிகள் மட்டக்களப்பில் நடாத்திய தாக்குதலின் மூலம் விடுதலைப்புலிகளின் நிலை வெளிப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டினார். கடந்த மாதத்தில் 15 படையினர் தமிழீழ விடுதலைப்புலிகளின் தாக்குதலில் பலியாகியுள்ளதுடன் 42 பொதுமக்கள் கொல்லப்பட்டுள்ளதாகவும் பிரதம மந்திரி மேலும் தெரிவித்தார். (ச-3)

கட்டுநாயக்க விமான நிலையத்தை தாக்க திட்டமிட்டிருந்த மூவர் பொலிஸாரால் கைது

'தினமின' செய்தி வெளியீடு

(கொழும்பு)

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையம் மீது தாக்குதல் நடத்த திட்டமிட்ட மூன்று நபர்களை சிலாபம் பொலிஸார் கைது செய்துள்ளதாக 'தினமின' செய்தி வெளியிட்டுள்ளது.

அச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது,

விநாயகம் மணிமாறன் என்பவர் கட்டுநாயக்க விமான நிலையத் தாக்குதலின் பின்னர் மன்னாருக்குத் தப்பியோடி இந்தியாவில் தஞ்சமடைந்திருந்தார். பின்னர் இந்தியாவிலிருந்து லண்டன் சென்ற அவர் கடந்த ஜனவரி மாதம் இலங்கை திரும்பினார்.

இவர் கொழும்பில் உள்ள விடுதலைப் புலிகளின் உளவுத்துறைப் பொறுப்பாளரைச் சந்தித்தபோது அங்கு அவருக்கு மற்றுமொரு தாக்குதல் திட்டமொன்று கையளிக்கப்பட்டது. கடற்படை மீதும் துறைமுகத்தின் மீதும் தாக்குதல் நடத்துவதே அந்தத் திட்டமாகும்.

திட்டத்தை அமுல்படுத்தவென கொழும்பில் தங்கியிருக்கும் விடுதலைப்புலிகளின் உளவுத்துறையினர் மற்றும் தற்கொலைக் குண்டுதாரிகள் உட்பட 20ற்கும் மேற்பட்டோரின் உதவியைப் பெற அறிவுறுத்தல் விடுக்கப்பட்டது.

இந்த இரு தாக்குதல்களையும் ஒரே நாளில் நடத்த வேண்டும் என்று அறிவுறுத்தல் விடுக்கப்பட்டதாக விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது என அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டிருந்தது. (ச)

நளினியின் மகள் இந்தியா செல்ல அனுமதிக்குமாறு நீதிமன்றம் தீர்ப்பு

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட நளினியின் மகள் மெகரா, இலங்கையிலிருந்து இந்தியா வர அனுமதிக்குமாறு சென்னை உயர் நீதிமன்றம் மத்தியரசுக்கு உத்தரவிட்டுள்ளது.

1991 ஆம் ஆண்டு மே 21 ஆம் திகதி முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி சென்னை அருகே சிறிபெரும்புதூரில் நடந்த குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டார்.

இப்படுகொலை தொடர்பாக நளினி, முருகன் உட்பட 26 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களுக்கு தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டது. பின்னர் நளினிக்கு மட்டும் தூக்குத் தண்டனை ஆயுள்தண்டனையாகக் குறைக்கப்பட்டது.

சிறையிலேயே நளினிக்குப் பெண் குழந்தை பிறந்தது. ஆறு வயதுவரை மெகரா என்ற அக் குழந்தை தாயுடன் சிறையிலிருந்தது. இதனையடுத்து மெகராவை முருகனின் தாயார் இலங்கைக்கு அழைத்துச் சென்றார். தற்போது அவருக்கு வயது 16.

தாயைப் பார்க்க விரும்புவதாக மெகரா கூறினார். இதனையடுத்து தனது மகளுக்கு விசா கேட்டு நளினி விண்ணப்பித்தார். இவ் வழக்கின் தீர்ப்பை நீதிபதிகள் நேற்று வழங்கினர்.

குடியுரிமைச் சட்டத்தின்படி இந்தியரான மெகரா, இந்தியாவுக்கு வரத் தகுதியுள்ளவர். எனவே அவர் இந்தியா வர நான்கு வாரத்தில் அனுமதிக்குமாறு மத்திய அரசுக்கு உத்தரவிடுகின்றோம்.

அவருக்கு இந்தியக் குடியுரிமை வழங்குவது பற்றி மத்திய அரசுதான் முடிவு செய்ய வேண்டுமென்று தீர்ப்புக் கூறினார் நீதிபதி. (ச)

என்னெய் வள ஆய்வுக்கு சீனாவுடன் உடன்படிக்கை

(கொழும்பு)

இலங்கையில் எண்ணெய் வள அகழ்வுப் பணிகளுக்கு என எதிர்வரும் 2 மாதங்களுக்குள் சீனாவுடன் உடன்படிக்கை ஒன்று கைச்சாத்திடப்படவுள்ளதாக அமைச்சர் ஏ.எம்.எச்.பௌசி தெரிவித்துள்ளார்.

மன்னார் கடற்பரப்பில் எண்ணெய் வளம் உள்ளதாக இனம் காணப்பட்டுள்ள எட்டு வலயங்களில் ஒரு வலயத்தின் எண்ணெய் அகழ்வுப் பணிகளைச் சீனாவிடம் கையளிக்க அரசாங்கம் விருப்பம் தெரிவித்துள்ளது.

இந்த வலயத்தை விலை மனுக் கோரலின்றி வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எண்ணெய்வள அகழ்வுப் பணிகளை மேற் கொள்ளவென இதனைப்போல் மேலும் ஒரு வலயத்தை விலை மனுக் கோரலின்றி இந்தியாவுக்கு வழங்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

நாட்டின் எண்ணெய் அகழ்வுப் பணிகளுக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்க சீன அரசாங்கம் விருப்பம் தெரிவித்துள்ளது.

இது விடயம் தொடர்பான சிறப்பு பேச்சுவார்த்தை ஒன்றை சீன எண்ணெய்வள அமைச்சருடன் விரைவில் நடத்த திட்டமிடப்பட்டுள்ளது என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ச)

மலையகத்தைக் கண்காணிக்க விசேட உளவுப் பிரிவு அமைப்பு

மலையகப் பகுதிகளில் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் குறித்துக் கண்டறியும்முகமாக சிறப்பு உளவுப் பிரிவு ஒன்று நிறுவப்பட்டுள்ளதாக ஊவா மாகாணத்திற்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் ரி.ஜே.மிஸ்கின் தெரிவித்துள்ளார்.

உளவுப் பிரிவின் தகவல்களின் அடிப்படையிலேயே அண்மையில் மலையகப் பகுதிகளில் பல ஆயுதங்களைக் கைப்பற்ற முடிந்தது. மட்டக்களப்பில் இருந்து தப்பி வந்த 50ற்கும் மேற்பட்ட விடுதலைப்புலிகள் தற்போது மலையகப் பகுதிகளில் தலைமறைவாகியுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார். (ச)

இலங்கையில் முதலாவது குளோனிங் செம்மறி ஆடு

பேராதனைப் பல்கலைக்கழக விலங்கியல் விஞ்ஞான பீடத்தில் மேற்கொண்ட ஆய்வுகள் மூலம் குளோனிங் செம்மறி ஆட்டுக் குட்டி பிறந்துள்ளது.

இலங்கையில் நடத்தப்பட்ட இவ் ஆய்வு வெற்றியளித்துள்ளதாகவும் இனிவரும் காலங்களில் மிருக வைத்தியம், மருந்து தயாரிப்பு, உயிரியல் வைத்தியம் போன்ற வற்றில் ஆய்வுகளை மேற்கொள்ள இவ் வெற்றி மைல் கல்லாக அமையுமென இவ் ஆய்வுக் குழுவின் தலைவர் மருத்துவர் பாகில் அலெக்ஸ்சாண்டர் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் குளோனிங் முறை மூலம் பிறந்த இச் செம்மறி ஆட்டுக்குட்டிக்கு பேராதெனிய குமராய் என பெயர் சூட்டப்பட்டுள்ளது. பெராதெனிய குமாரய் தற்போது ஆரோக்கியமாக இருப்பதாக வைத்தியர் மேலும் தெரிவித்தார். இவர்களால் இலங்கையில் முதல்முதலாக மேற்கொள்ளப்பட்ட குளோனிங் முறை வெற்றியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ச-5)

வீடுகள் வாடகைக்கு

கோவில் வீதி, நல்லூர் கந்தன்கருணை லேனில் சகல வசதிகளுடனும் கூடிய இரு வீடுகள் வாடகைக்கு உண்டு. தொடர்பு:- இல.122, சிவன் கோவில் வீதி, திருநெல்வேலி. T.P. 021 222 6366.

குறிப்பு:- 12 மணிக்கு பின்னர் நேரில் வரவும். (773)

ஒழுங்கீனம் அல்லது கீழ்ப்படியாமை என்பது ஜனநாயகத்திற்கும் சமுதாய சீரமைப்புக்கும் நேர்விரோதமானது. தங்களது செயல்களின் விளைவுகள் சமுதாயத்தை எவ்வாறு பாதிக்கக்கூடும் என்பதை அரசியல்வாதிகள் உணர்ந்து கொள்ள வேண்டும். –டாக்டர் இராதாகிருஷ்ணன்

வலம்புரி

நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு அமைதி முயற்சியைப் பாதுகாத்தது

அரசும் விடுதலைப்புலிகளும் செய்து கொண்ட யுத்த நிறுத்த உடன்படிக்கை சட்டபூர்வமானதென வும், அது இலங்கையின் அரசியல்யாப்பை மீறவில் லையெனவும் மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப் பளித்துள்ளது.

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பு பேரின வாதிகளின் கொட்டத்தை அடக்குவதற்கான அத்தி பாரமாக கொள்ளப்படவேண்டியதொன்றாகும்.

வடக்குக் கிழக்கு மாகாண இணைப்பு சட்டத் திற்கு முரணானது என ஜே.வி.பி. தாக்கல் செய்த மனுமீதான தீர்ப்பு அக்கட்சிக்கு சாதகமாக அமைந் தது.

வடக்குக் கிழக்கு இணைப்பு சட்ட ரீதியில் சில தேவைகளை நிறைவு செய்ய வேண்டியதாக இருந் தாலும், வடக்கையும் கிழக்கையும் பிரிப்பதென்பது நாட்டில் அமைதியைக் குலைக்கும் செயலாகவே அமையும்.

வடக்கும் கிழக்கும் தமிழர் தாயகமாக அங்கீ கரிக்கப்பட வேண்டும் என்பதும், 'சமஷ்டி' அடிப் படையிலான தீர்வென்பது வடக்கையும் கிழக்கை யும் இணைத்த விடயம் என்பதும் தெரிந்ததே.

எனினும் நாட்டில் அமைதியையும் இன ஒற்று மையையும் விரும்பாத ஜே.வி.பி. வடக்குக் கிழக்கு மாகாணங்களின் இணைப்புப் பிரிக்கப்பட வேண்டு மெனக் கோரி நீதிமன்றில் தாக்கல் செய்த மனு, சாதகமாக அமைய, ஜே.வி.பியின் இனவாதப் போக்கு மேலும் அதிகரிக்கலாயிற்று.

இதனடிப்படையில் அரசும் விடுதலைப்புலிக ளும் செய்து கொண்ட யுத்தநிறுத்த உடன்படிக்கை இலங்கையின் அரசியல் யாப்புக்கு முரணானது என்பதையும், அதனை இரத்துச் செய்யவும் கோரி மேன்முறையீட்டு நீதிமன்றில் ஜே.வி.பி. மனுத் தாக் கல் செய்தது.

அரசும் விடுதலைப்புலிகளும் செய்த போர் நிறுத்த உடன்படிக்கை ஐந்து வருடங்களை எட்டி விடமுடியாதென்ற நோக்கிலும், நாட்டில் அமைதி யைக்குலைக்கும் வகையிலும் ஜே.வி.பியால்செய்து கொள்ளப்பட்ட மனு மீதான தீர்ப்பு ஜே.வி.பிக்குக் குந்தகமாக அமைந்துவிட்டது. நீதிமன்றத்தின் இத் தீர்ப்பு பேரினவாதிகளின் சிந்தனைக்கு பேரிடியாக அமைந்துள்ளது எனக் கூறலாம்.

யுத்த நிறுத்த உடன்படிக்கை செல்லுபடியற்ற தென்ற தீர்ப்பை நீதிமன்றம் வழங்கியிருக்குமா யின், இலங்கையில் அமைதி முயற்சியை மேற் கொண்ட நோர்வேயும், கண்காணிப்புக் குழுக் களும் உடனடியாக தமது பணியை நிறுத்தி விட்டு வெளியேற வேண்டியிருக்கும்.

ஏனெனில் யுத்த நிறுத்த உடன்படிக்கையின் அடிப்படையிலேயே கண்காணிப்புக் குழுவின் பணி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

யுத்த நிறுத்த உடன்படிக்கை செல்லுபடியற்ற தென்ற தீர்ப்பு வழங்கப்பட்டிருக்குமாயின், கண் காணிப்புக் குழுவின் பணியும் முடிபுறுத்தப்பட வேண்டியதாக இருந்திருக்கும்.

அதேநேரம் நோர்வே அரசு மேற்கொண்ட சமா தான அனுசரணை முயற்சி காரணமாகவே யுத்த நிறுத்த உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது.

அவ்வாறு செய்து கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கை இலங்கையின் அரசியல் யாப்பிற்கு முரணாக அமையும் சந்தர்ப்பத்தில் அமைதி முயற் சியிலிருந்து நோர்வே வெளியேறுவதே ஒழுங்காக இருந்திருக்கும்.

இவற்றை இலக்காகக் கொண்டே ஜே.வி.பியும் மனுத் தாக்கல் செய்திருந்தது. எனினும் நீதிமன் றின் தீர்ப்பு யுத்தநிறுத்த உடன்படிக்கையை சட்ட வலுவுள்ளதாக ஆக்கியிருப்பதால் அமைதி முயற் சிகள் மீண்டும் தளிர் விடுவதற்கான வாய்ப்புக்கள் உண்டெனக் கூறிக் கொள்ளலாம்.

முத்துராஜவெலவில் கண்டெடுக்கப்பட்ட சடலங்கள் அடையாளம் காணப்பட்டன

(கொழும்பு)

கந்தானை பகுதியிலுள்ள முத்துராஜவெல சதுப்பு நிலப் பகுதியிலிருந்து கடந்த வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் மீட்கப்பட்ட சடலங்கள் கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்தவர்க ளுடையது என அடையாளம்காணப்பட்டுள்ளன.

கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள் மட்டக்களப்பிலி ருந்து வந்து சடலங்களை அடையாளம் காட்டியதாக செய் திகள் தெரிவிக்கின்றன.

மட்டக்களப்பு சேர்ச் வீதியைச் சேர்ந்த அருள்சுரேஷ், மட் டக்களப்பு ஆயித்தியமலையைச் சேர்ந்த சுப்பிரமணியம் பிர பாகரன், மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த சிவப் பிரகாஷ் மதிரூபன், மட்டக்களப்பு நகரைச் சேர்ந்த கந்தசாமி வெள்ளையன், மட்டக்களப்பு உன்னிச்சமலையைச் சேர்ந்த பொன்னையா கமல்க[illegible]க் ஆகியோரே அடையாளம் காணப்பட்டவர்களாவர்.

இந்தச் சடலங்களின் பிரேத பரிசோதனைகள் நேற்று முன் தினம் மாலை ராகம அரசாங்க மருத்துவமனையில் நடை பெற்றது. சடலங்களை உறவினர்களிடம் கை[illegible]ளிக்குமாறு மேலக மக்கள் முன்னணியின் கொழும்பு மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினரும் பொதுமக்கள் கண்காணிப்புக் குழுவின் உறுப்பினருமான மனோகணேசன் நீதிபதியிட்ம் வேண்டு கோள் விடுத்திருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனிடையே அநுராதபுரத்தில் உள்ள திராபன் பகுதியி லிருந்து மீட்கப்பட்ட சடலங்கள் நேற்று முன்தினம் மாலை வரை அடையாளம் காணப்படவில்லை. சடலங்கள் அநுராத புர பொது மருத்துவமனையில் வைக்கப்பட்டிருக்கின்றன. (ச–5)

மட்டக்களப்பில் 15 வீதமான பகுதியே விடுதலைப்புலிகளின் வசம் உள்ளன!

அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவிப்பு

(கொழும்பு)

மட்டக்களப்பில் 85 வீதமான பகுதியைப் படையினர் கைப்பற்றியுள்ளனர் எனவும் தொப்பிக்கல அண்மித்த 15 வீத மான பகுதிகளே புலிகள் வசம் உள்ளதாக தேசிய பாதுகாப் புப் பேச்சாளரும் அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட் டிலேயே அவர் இவ்வாறு கூறினார். மட்டக்களப்பில் வாக ரைப் பகுதி தற்போது முழுமையாகக் கைப்பற்றப்பட்ட நிலை யில் இடம்பெயர்ந்தவர்களை அங்கு குடியேற்றுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தற்போதும் கூட 10 ஆயிரத்திற்கும் அதிகமானோரைக் குடியமர்த்து வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் கூறினார்.

இது தவிர வாகரையில் பொலிஸ் நிலையம் ஒன்று அமைப்பதற்கான சகல நடவடிக்கைகளையும் எடுத்துள்ள தாகவும் அமைச்சர் ரம்புக்வெல கூறினார்.

அத்தோடு புலிகளுடன் தொடர்பு வைத்துள்ள அரச சார் பற்ற நிறுவனங்களுக்கு எதிராக விசாரணைகளைமேற் கொள்ளும் பொறுப்பு பாதுகாப்பு அமைச்சின் செயலாளரி டம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

சந்தேகத்திற்குள்ளாகும் அரச சார்பற்ற நிறுவனங்கள் தங்கள் மீது சுமத்தப்பட்டுள்ள குற்றத்தைப் போக்க வேண்டு மானால் அதுகுறித்த ஆவணங்களைக் கொண்டு ஊஜிதப் படுத்த வேண்டுமெனவும் அவர் கூறினார்.

இதேவேளை தமிழீழ விடுதலைப்புலிகளுடன் தொடர்பு களைக் கொண்டுள்ள தேசிய மற்றும் சர்வதேச அரச சார் பற்ற நிறுவனங்கள் குறித்து விசாரணைகளை நடத்துவதற்கு அரசாங்கம் தயாராகவுள்ளதென அமைச்சர் ஹெகலிய ரம் புக்வெல தெரிவித்தார்.

இது தொடர்பாக பாதுகாப்புச் செயலாளர், அரசசார்பற்ற நிறுவனங்களுடன் பேச்சுக்களை நடத்தியுள்ளதாக அவர் கூறினார். சந்தேகத்திற்கிடமான நிறுவனங்கள்குறித்து விசா ரணை மேற்கொள்வது பற்றி இதன்போது இணக்கம் காணப் பட்டுள்ளது.

பயங்கரவாத அமைப்புக்கு உதவும் அரச சார்பற்ற நிறு வனங்கள் அடையாளம் காணப்பட்டால் உண்மையான சேவை மனப்பான்மை கொண்ட அமைப்புக்கள் தமது சேவையை உரிய முறையில் மேற்கொள்ள முடியும் என வும் அவர் குறிப்பிட்டார். (ச–3,5)

அரசு – விடுதலைப்புலிகளுக்கிடையில் நிதிக் கொடுக்கல் வாங்கல்கள்!

விசாரிக்க வேண்டும் என ரவி எம்.பி. கோரிக்கை

(கொழும்பு)

அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் செய்து கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படும் இரகசிய ஒப் பந்தத்தின் போது புலிகளுக்கு வழங்கப்பட்ட பெருந்தொகைப் பணம், பணம் தூய்தாக்கலை தடுப்பதற்கான சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டதா? அல்லது வங்கிகள் மூலமாக செலுத் தப்பட்டதா? என்று ஐக்கிய தேசியக் கட்சியின் கொழும்பு மாவட்ட எம்.பி. ரவி கருணாநாயக்க சபையில் கேள்வி எழுப் பினார்.

அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையி லான நிதி கொடுக்கல் வாங்கல் தொடர்பில் விசாரணை மேற் கொள்ளப்பட வேண்டும். இது குறித்து விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிப்பதற்கு அரச நிதி புலனாய்வுப் பிரிவுக்கு அதிகாரம் உள்ளது என அவர் சுட்டிக்காட்டினார்.

பாராளுமன்றம் சபாநாயகர் வி.ஜே.மு.லொக்குபண்டார தலைமையில் நேற்று முன்தினம் கூடியபோது பாராளு மன்ற உறுப்பினர்களுக்கான வாய் மூலக் கேள்வி நேரத் தின் போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பினார்.

அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே இரகசிய ஒப்பந்தம் ஒன்று செய்யப்பட்டுள்ளதாக பதவி விலக் கப்பட்ட அமைச்சர்கள் கூறுகின்றனர். இதன் உண்மைநிலை மை என்ன என்று கேள்வி எழுப்பிய ரவி கருணாநாயக்க எம்.பி., புலிகளுக்கு வழங்கப்பட்டதாகக் கூறப்படும் பெருந் தொகைப் பணம் எந்த நடைமுறையின் கீழ் வழங்கப்பட்டது எனவும் கேள்வி தொடுத்திருந்தார்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண் டோபுள்ளே, இந்தக் கேள்வி பொருத்தமில்லாதது என்றார். அத்துடன் புலிகளுக்கு நிதி வழங்கப்பட்டதாக மத்திய வங்கி யின் நிதிப் புலனாய்வுப் பிரிவு அறிக்கையில் எதுவும் தெரி விக்கப்படவில்லை என்றும் கூறினார். அமைச்சரின் இந்தப் பதில் தொடர்பாக சபையில் சில நிமிட நேரம் சர்ச்சை ஏற்பட் டது. (ச–5)

ரணில் – புலிகளுக்கு வெற்றியை ஏற்படுத்த சர்வதேச சக்திகள் முயற்சிக்கின்றன

விமல் வீரவன்ச குற்றச்சாட்டு

(கொழும்பு)

மகிந்த ராஜபக்ஷவின் அரசாங்கத்திற்கு சங்கடங்களை ஏற்படுத்தும் விதத்தில் தென்னிலங்கையில் சிக்கல்களை தோற்றுவித்து அதன் ஊடான நிச்சயமற்ற நிலையை பயன் படுத்தி விடுதலைப்புலிகளுக்கும் ரணிலுக்கும் வெற்றிப் பா தையை அமைத்துக் கொடுக்க சர்வதேச சக்திகள் முயற்சிக் கின்றன. அதனை ராஜபக்ஷ அரசாங்கம் விளங்கிக் கொள்ள மறுக்கின்றது என தேசப்பற்றுள்ள தேசிய இயக்கத்தின் பது ளை மாவட்ட கூட்டத்தில் உரையாற்றிய போதே விமல் வீர வன்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

எமது நாடு இன்று பல போராட்டங்களைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றது. ஒரு புறம் சர்வதேச சக்திகள் சதித் திட் டத்தைத் தீட்டிக் கொண்டிருக்கின்றன. அந்தச் சதித் திட்டத் தின் கீழ் உள்ளக சக்திகள் ஒன்றுபட்டுக் கொண்டிருக்கின்றன. நோர்வேக்காரர்கள் எண்ணெயையும் சமாதானத்தை யும் கைகளில் எடுத்துக் கொண்டனர். எண்ணெயில் வறுத் தெடுத்த சமாதானத்தை நோர்வேக்காரர்கள் தயாரிக்க ஆரம் பித்தனர். அன்று இந்த நாட்டை ஆட்சி செய்தது ரணிலா அல்லது வெள்ளையர்களா என்ற சந்தேகம் ஏற்படுகின்றது.

எமது நாட்டை அழிக்க எவருக்கும் இடமளிக்க முடியாது. இந்த மேற்கத்தேய சக்திகள் உலகில் எங்கு எண்ணெய் வளம் இருக்கின்றது என்று தேடிக் கொண்டிருக்கின்றன. பின்னர் மோதல்களைத் தீர்க்கவும் அவர்கள் தலையீடுக ளை மேற்கொள்கின்றனர்.

ரணிலை ஒருபுறம் வைத்துக் கொண்டு சந்திரிகா அம் மையாரை ஏமாற்றி நோபல் விருது வழங்குவதாக வாக் குறுதி அளித்து இருவரையும் ஒரே வண்டியில் வைத்து விர ட்டிச் செல்வதே சர்வதேச சமூகத்தின் நோக்கமாகும் என அவர் மேலும் தெரிவித்தார். (ச)

தீர்ப்புக்குறித்து...

மையைடுத்து ஜே.வி.பி.வெளியிட்ட அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரி விக்கப் பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது; கடந்த 2002ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கை சட்டரீதியற்றதும் அதிகாரமற்றதுமென அறி விக்கக்கோரி ஜே.வி.பி.யினரால் மேன்முறை யீட்டு நீதிமன்றில் செய்யப்பட்ட மனுவை மேன்முறையீட்டுநீதிமன்றம் நிராகரித்துள்ளது.

நாட்டில் ஜனாதிபதி இருக்கும்போது பிர தமர் இந்த உடன்படிக்கையை கைச்சாத்திட்ட மையானது தவறு என்ற அடிப்படையிலேயே ஜே.வி.பி.இந்த வழக்கை தாக்கல் செய்தது.

2002ஆம் ஆண்டு மார்ச் மாதம் தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கை விசாரிப்பதா? இல்லையா? என்பது குறித்து மேன்முறை யீட்டு நீதிமன்றம் ஆராய்ந்து வந்தது.

பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை அனுப்ப முடியாது என்றும் இந்த மனுவை விசார ணைக்கு எடுத்துக்கொள்ள முடியாது என்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி ஸ்ரீஸ்கந்த ராஜா தலையிலான நீதிபதிகள் முடிவெடுத் தனர்.

இந்தத் தீர்ப்புக் குறித்து திருப்தியடைய வில்லை எனவே அரசியலமைப்பின் பிரகா ரம் இந்த வழக்கை உயர்நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லநாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

புலிகளுக்கு இராஜதந்திர அந்தஸ்தை பெற்றுக்கொடுத்த போர்நிறுத்த உடன்படிக் கையினை பலமற்றதாக மாற்ற எடுக்கவேண் டிய அனைத்து சட்ட நடவடிக்கைகளையும் எடுப்பதற்கு ஜே.வி.பி.அர்ப்பணிப்புடன் இருக் கின்றது என்று நாட்டின் அனைத்து இன மக் களுக்கும் அறிவிக்கின்றோம் என்றுள்ளது. (ச)

மந்துவில்...

எனினும் இத் தாக்குதல் குறித்து இராணு வத்தினர் எதுவித தகவலையும் தெரிவிக்க வில்லை.

இத் தாக்குதலால் பொதுமக்களுக்கு எதுவித ஆபத்தும் ஏற்படவில்லையென தெரிவிக்கப்படுகிறது. (ச)

மூன்று...

படவில்லை என பொலிஸார் தெரிவித் துள்ளனர்.

பொலிஸார் சமர்ப்பித்த இரகசிய அறிக் கையொன்றை ஆராய்ந்த நீதிவான் சந்தேக நபர்களை ஏப்ரல் மாதம் 5ஆம் திகதிவரை தடுத்துவைத்து விசாரணை செய்ய அனுமதி வழங்கினார். (ச-3)

அக்ஸன் பாம் வெடியர்களின்...

களை பொலிஸார் தாமதமின்றி நடத்த வேண்டும் என்றும், சாட்சிகளுக்கு தேவைப்ப டும் பட்சத்தில் போதிய பாதுகாப்பு வழங்கப் படவேண்டும் என்று நீதிவான் உத்தரவிட்டார்.

இந்த மரண விசாரணைகளின்போது சர் வதேச சட்ட வல்லுநர் அமைப்பைச் சேர்ந்த சட்டத்தரணி மைக்கல் ஜிம்பொங் மற்றும் சர் வதேச சட்ட வல்லுநர் ஆணைக்குழுவைச் சேர்ந்த சட்டத்தரணி குஸ்னகன் ஆகியோர் நீதிமன்றில் சமுகமளித்திருந்தனர்.

மூதூரில் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தின் போது அக்ஸன் பாம் அமைப்பைச் சேர்ந்த இலங்கைப் பணியாளர்கள் 17 பேர் படுகொலை செய்யப்பட்டிருந்தமை தெரிந்ததே. (ச)

இலங்கைக்கு அமைதிப்படையை...

படையினரை வேறு இடங்களுக்கு கொண்டு செல்வதோ இந்த ஒப்பந்தத்தில் இல்லை.

இந்த ஒப்பந்தம் இரு நாடுகளுக்கு இடை யில் வழங்கல்களை பரிமாறிக் கொள்வதும் ஆதரவுகளை வழங்குவதுமாகும். இலங்கை செல்லும் அமெரிக்க கப்பல்களின் எண்ணிக் கை தொடர்பாகவும் இதில் குறிப்பிடப்படவில் லை. எனினும் பொருட்களையும், சேவைக ளையும் இலகுவாக பெற்றுக்கொள்ள இந்த ஒப்பந்தம் வழிவகுக்கும்.

இந்த ஒப்பந்தத்தின் பிரகாரம், இலங்கை யில் ஒரு முழு அளவிலான போர் மூண்டால் அமெரிக்கா இராணுவ உதவிகளை வழங் குமா எனக் கேட்டபோது அதற்கு அவர் பதி லளிக்க மறுத்ததுடன் இதனை உறுதிப்படுத்த தன்னிடம் போதிய தகவல்கள் இல்லை என வும் தெரிவித்தார்.

மேலும் உணவுப் பொருட்கள் ளிபொருள் போக்குவரத்து என்பனவே இந்த ஒப்பந்தத் தின் மூலம் அனுமதிக்கப்படும் பொருட்களும் சேவைகளும் ஆகும். ஆயுதங்கள் மற்றும் வெடிபொருட்கள் வழங்குவதை இந்த ஒப்பந் தம் தெளிவாக தடை செய்துள்ள தாக அமெ ரிக்க தூதரக செய்திக் குறிப்பு தெரிவிக் கின்றது. (ச-5)

84 தமிழர்களையும்...

இவற்றிற்கு எதிராக குரல் கொடுக்கும் ஊடகவியலாளர்கள், மனித உரிமை ஆணைக் குழு அதிகாரிகள் ,மனித உரிமை ஆர்வலர் கள், பாராளுமன்ற உறுப்பினர்கள் போன் றோர் படுகொலை செய்யப்படுகின்றனர்.

இவற்றினை தடுத்து நிறுத்த முடியாத துர திஷ்ட வசமான நிலைக்கு நாம் தள்ளப்பட்டுள் ளோம்.

மனித உரிமை மீறல்களில் இலங்கை யில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட் டுள்ள கைதிகளுக்கு சட்ட ரீதியான அணுகு முறைக்கு வாய்ப்புக்கள் மிகக்குறைவானது அல்லது இல்லாத நிலையே காணப்படுவது டன்,

நீண்ட காலமாக நீதிமன்றங்களில் ஆஜர்படுத்தப்படாமலும் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாமலும் தடுத்து வைக்கப் பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்படுகின்ற னர்.

இந் நிலையில் மேற்படி மனிதவுரிமை மீறல்களில் இருந்து தப்பிக் கொள்வதற்காக பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் இலங் கையிலிருந்து தப்பி இந்தியாவிற்கும், ஏனைய நாடுகளுக்கும் சென்று கொண்டிருக்கின்ற னர்.

அதன் ஒரு பகுதியாக இலங்கையில் இருந்து தப்பிச் சென்ற 84 தமிழர்கள் அவுஸ் திரேலியக் கடற்படையினரால் கைதுசெய்யப் பட்டுள்ளனர்.

அவ்வாறு கைது செய்யப்பட்ட வர்களை மீண்டும் இலங்கைக்கு அழைத்து வர இலங்கை அரசு முயன்று வருகின்றது.

இலங்கை அரசின் கோரிக்கைக்கு அமைவாக தமிழ் அகதிகள் இலங்கைக்கு திருப்பி அனுப்பப்பட்டால் அவர்களுக்கு உயி ராபத்து ஏற்படும் என அஞ்சுகின்றோம்.

கடந்த 2002 ஆம் ஆண்டு உயிராபத் திற்கு அஞ்சி நாட்டைவிட்டு வெளியேறி 2002 மே மாதம் பிரான்ஸ் நாட்டினுள் நுழைந்த அகதி அந்தஸ்து கோரிய சாவகச் சேரியைச் சேர்ந்த இராசேந்திரம் இளஞ்செல் வன் என்ற இலங்கை அகதியின் கோரிக்கை பிரான்ஸ் அரசினால் நிராகரிக்கப்பட்டு இலங் கைக்கு திருப்பி அனுப்பப்பட்டார்.

கடந்த 28.02.2007 அன்று இளஞ்செல் வனைத் தேடி அவரது வீட்டிற்குச் சென்ற ஆயுதக்குழுவினர் காலை 5.50 மணியள வில் அவரது வீட்டில் வைத்து சுட்டுக்கொன்று ள்ளனர்.

இவ்வாறான சூழ்நிலையில் அவுஸ்திரேலிய கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள 84 இலங்கைத் தமிழர்களையும் இலங்கை யில் நிரந்தர சமாதானம் ஏற்படும் வரை திருப்பி அனுப்ப வேண்டாமென மக்கள் பிரதி நிதிகளாகிய நாம் அவுஸ்திரேலிய மற்றும் இந்தோனேசிய அரசாங்கங்களை கேட்டுக் கொள்கின்றோம் என்றுள்ளது. (ஏ)

புலிகள்...

செஞ்சிலுவைச் சங்கத்தினரின் வழித்து ணையுடன் காலை அழைத்து வரப்பட்ட பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளிடம் போர்க் கைதி களாக இருக்கும் தமது பிள்ளைகளை சந்தித்து கலந்துரையாடினர்.

போர்க் கைதிகளாக இருக்கும் தமது உற வுகளை விடுவித்து தருமாறு அரசாங்கத்தி டம் கோரிக்கை விடுத்ததாகவும் அதற்கு அவர்கள் உரிய நடவடிக்கைகளை எடுக்க வில்லை என்றும் சிறைப்பிடிக்கப்பட்டவர்களின் பெற்றோர்கள் மற்றும் உறவினர்கள் தெரி வித்தாக கிளிநொச்சி செய்திகள் தெரிவித் தன. (ச-5)

மனித உரிமை கண்காணிப்புக்குழுவை...

இந்த விடயம் எதிர்வரும் வாரம் ஆரம்ப மாகும் ஐக்கிய நாடுகள் சபைக்கான மனித உரிமைகள் ஆணையத்தின் (யு.என்.எச்.சீ. ஆர்) நான்காவது அமர்வின்போது ஆராயப் படும் என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை அரசாங்க கட்டுப்பாட்டுப் பகுதி மற்றும் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிகளில் இடம்பெற்று வரும் மனித உரி மை மீறல்களை அடுத்தே இந்த குழுவை அமைக் கும் திட்டம் விவாதிக்கப்படவுள்ளதாக மனித உரிமைகள் கண்காணிப்பின் சட்ட ஆலோசகர் ஜோன் ரொஸ் தெரிவித்துள்ளார்.

நாமும் ஏனைய அனைத்துலக மற்றும் பிராந்திய மனித உரிமை அமைப்புக்களும் அரசுகளுடன் கலந்து ஆலோசித்து ஐக்கிய நாடுகள் சபையின் அனுசரணையுடன் அனைத்துலக மனித உரிமைகள் கண்கா ணிப்புக் குழு இலங்கையில் அமைக்கப்பட வேண்டிய தேவைகள் குறித்து ஜெனீவாவில் நடைபெறவுள்ள மனித உரிமைகள் சபை யில் ஆராயவுள்ளோம்.

மிகவும் பயனுள்ளதான இந்த நடவடிக்கை களை இலங்கை அரசுடன் இணைந்து செயல் திறனுள்ளதாக மாற்றுவோம் என நம் புகின்றோம். அரசின் பயங்கரவாத தடைச் சட்டம், கைது செய்தல் மற்றும் தடுத்து வைத் தல் போன்ற செயற்பாடுகளுக்கு படையின ருக்கு மிக அதிகளவான அதிகாரங்களை வழங்கியுள்ளது.

பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடு வோர் நீதிமன்றங்களின் மூலம் பாகுபாடின்றி தண்டிக்கப்பட வேண்டும் என்றார் அவர். (ச)

இன்னும் பல வாடிக்கையாளர்களின் விருப் பத்திற்கு ஏற்ற வகையில் மேலைத் தேய உணவு வகைகள், தங்குமிட வசதிகள் மற்றும் ஓடர் உணவுகள் குறித்த நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

குறிப்பு:- அலுவலகங்களுக்கான ஓடர் உணவுகளுக்கு விசேட தள்ளுபடி வழங்கப்படும்

புளூரிபன் ஹோட்டல் அன் றெஸ்ரோறன்ஸ்
சீ ரோட்,
T.P:- 0775006999
தும்பளை பருத்தித்துறை, 0776529078
உரிமையாளர்:- ஞா.ஜரியதாஸ் 0212263999

திருமறைக் கலாமன்றம்
கலைத்தூது அழகியல் கல்லூரி

KALAITHUTHU COLLEGE OF AESTHETICS

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ள
'கலைக்காவிரி' நுண்கலைக் கல்லூரியுடன் இணைந்து ஆரம்பித்துள்ள
வளாகம் கடந்த பரதநாட்டிய பட்டப்படிப்பு

இலங்கையில் முதல் தடவையாக யாழ்ப்பாணத்தில் எமது கல்லூரிக்கூடாக மேற் படி பட்டப்படிப்பு பயிற்சி நெறியினை இனிவரும் காலங்களில் மாணவர்கள் மேற்கொள்ள முடியும் என்பதனை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

ஆரம்பமாகவுள்ள பட்டப்படிப்புக்கள்

01. இள நுண்கலைமாணி (B. F.A) Bachelor of fine Arts (காலம் 3 வருடம்)
02.முது நுண்கலைமாணி (M.F.A) Master of fine Arts (காலம் 2 வருடம்)
03.பெருஞ்சான்றிதழ் கற்கை Diploma in Dance (காலம் 1 வருடம்)

இள நுண்கலைமாணி (B F A) அல்லது பெருஞ்சான்றிதழ் (Diploma) கற்கை நெறியை பயில விரும்புபவர்களுக்கான அடிப்படைத் தகுதிகள்:-
(G.C.E O/L) இல் ஆங்கிலம் உட்பட 5 திறமைச்சித்திகள்.
(G.C.E A/L) இல் 2 திறமைச் சித்திகள்
அல்லது (G.C.E. O/L) இல் 4 திறமைச்சித்திகளுடன் (G.C.E. A/L) இல் 3 திற மைச் சித்திகள்.
பல்கலைக்கழகத்தில் வேறு பாடங்களைத் தொடர்பவர்களும் கலைத் துறை சாராத பாடங்களைக் கற்பவர்களும் கூட இக் கற்கை நெறியைத் தொடர முடியும்.
இவ் வருடத்துக்கான பயிற்சி நெறியில் இணைய விரும்புவோர் 30.04.2007 திங்கட்கிழமைக்கு முன்னதாக எமது கல்லூரியில் பதிவுகளை மேற்கொள்ளவும்.

கலைக் கோட்டம்,
இல. 128, டேவிற் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 021 222 9419

மேலதிக விபரங்களுக்கு,
அதிபர்,
கலைத்தூது அழகியல் கல்லூரி.

(C-அ-636)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.03.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.